# இனிது

வாழ்வினிது, வாழ்வினிது
வாழ்ந்து பார், வாழ்வினிது;
ஏற்றத்தையும் இறக்கத்தையும்
இனியாய் ஏற்றுக் கொண்டால்
வாழ்வினிது, வாழ்வினிது;

கவலை கொள்வதையே
கனியாய்க் கொண்டுவிட்டால்
மீண்டு வர வழியேது
மாற்று வழி காண்பதேது
மீண்டு எழு, மீண்டும் எழு
வாழ்ந்து பார், வாழ்வினிது;

வலி வரும், இழப்பு வரும்
இல்லாமை என்றும் வரும்
கோபத்தைக் கூட்டிக் கொண்டு
இயலாமை தானும் வரும்
வந்துபார் என்று நின்றால்
வந்த வழி போயும் விடும்;

காலங்கள் வந்து போகும்
கவலைகள் கரைந்து போகும்
படித்தவர் சலிக்கக் கூடும்
எதிர்த்தவர் இசையக் கூடும்
வருவது வரட்டும் என்று
வாழ்ந்து பார், வாழ்வினிது...

அசோ
பெங்களூர்
27 ஏப்ரல் 2017.